# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 37/2016**

திரு. அர. ஏழுமலை,
த/பெ அ.ரங்கசாமி,
கன்னியம்மன் கோவில் தெரு,
மேட்டுக்காடு,
சட்டமங்கலம் கிராமம்,
மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம். . . . . .மேல்முறையீட்டாளர்
(திரு. அர.ஏழுமலை)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–II,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
கே.கே. நகர்,
சென்னை– 600 078 . . . . . எதிர்மனுதாரர்
(திரு. நிலவழகன், செயற்பொறியாளர்/தாம்பரம்)

**கேட்புரை நாள் : 19.7.2016**

**ஆணை நாள் : 31.10.2016**

திரு. அர ஏழுமலை த/பெ. அரங்கசாமி, மேட்டுக்காடு அவர்களின் 15.4.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண். 37/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 19.7.2016 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள, வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் கேட்புரை நாளில் இருதரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ் கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

(i) இம்மனுவுடன் இணைக்கப்பட்ட அனைத்து நகல்களையும் பார்வையிட்டு, தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி பதில் கிடைத்திடாததற்கு தீர்வும்.

(ii) விண்ணப்பிக்கப்பட்ட இடத்திற்கு மின்பகிர்மான விதிமுறையின் 27/12ன் படியான அரசு அவ்வப்போது நெறிபடுத்துவதற்குகேற்ப தேவைப்படும் ஆவணங்கள் தந்தால் மட்டுமே புறம்போக்கு நிலத்திற்கு மின்இணைப்பு தரவேண்டும் என குறிப்பிட்டுள்ளபடி விண்ணப்பித்த அன்றைய நாள் வரை அரசு எவ்வித மாற்றமும் செய்யாத காரணத்தினால் அவ்விதியில் குறிப்பிட்டுள்ளபடியான ஆவணம் இணைத்து திருமதி தனலட்சுமி க/பெ. மோகன் அவர்களின் பெயரில் சமர்பிக்கப்பட்ட விண்ணப்பத்திற்கு மின்இணைப்பு வழங்க மறுத்திட்டத்தின் காரணமும் அதற்காக தீர்வும் கிடைத்திட வேண்டும்.

2. **வழக்கின் சுருக்கம்:**

2.1 மேல்முறையீட்டாளர் அவரின் 17.1.2015, 4.7.2015, 25.8.2015 மற்றும் 14.9.2015 ஆகிய நாட்களில் சமர்பித்த மனுவிற்கு மேற்பார்வை பொறியாளரிடமிருந்து பதில் பெறப்படவில்லை என்று தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின் படி தீர்வும், மின் இணைப்பு கேட்டு சமர்பித்த அவரின் உறவினரின் விண்ணப்பத்திற்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்றும், மின் இணைப்பு வழங்காத மின்பொறியாளர் முடிச்சூர் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்.

2.2 மன்றத்தில் மேற்பார்வை பொறியாளர், பதில் அளிக்காமைக்கான கோரிக்கை விசாரிக்கப்படவில்லை.

2.3 மின் இணைப்பு பிரிவு அலுவலரால் ஏன் வழங்கப்படவில்லை என்பதற்கு மட்டுமே விசாரணை நடைபெற்றது என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்து இந்த மேல்முறையீட்டு மனுவை சமர்பித்துள்ளார்.

## 3. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:</u>

3.1 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக மேற்பார்வை பொறியாளர்/கே.கே. நகர், அவர்களுக்கு அனுப்பப்பட்ட மனுக்களாக 17.1.2015, 4.7.2015, 25.8.2015 (25.8.2015 நாளிட்ட கடிதம் பிழையாக 27.8.2015 என குறிக்கப்பட்டு) மற்றும் 14.9.2015 ஆகிய நாளிட்ட கடிதங்களுக்கு பதில் கிடைத்திடாததால் அண்மையில் கிடைக்கப்பெற்ற தகவலின்படி 24.11.2015 அனுப்பிய கடிதத்தில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டுள்ளபடி பதில்வேண்டும் என குறிப்பாக குறிப்பிட்டு தெரிவித்திட்ட பின்பும் பதில் கிடைத்திடவில்லை என்பதேயாகும்.

3.2 30.3.2016ல் நடைபெற்றிட்ட விசாரணையில் குறைதீர்மன்றத்திற்கு விண்ணபித்திட்ட மனுவில் குறிப்பிட்டபடியான மேற்பார்வை பொறியாளர் பதில் அளித்திடாததற்குரிய விசாரணை நடைபெறவில்லை. மாறாக பிரிவு மின்பொறியாளர் மின்இணைப்பு எதற்காக வழங்க மறுக்கப்பட்டது என்பதற்கான விசாரணை நடைபெற்று தனிதாளில் பதியப்பட்ட அந்த அறிக்கை குறிப்பிலும் அனுப்பிய மனுவிற்கு மேற்பார்வைபொறியாளர் பதில் அளித்திடாதது பற்றி குறிக்கவில்லை.

3.3 இம்மனுவுடன் இணைக்கப்பட்ட அனைத்து நகல்களையும் பார்வையிட்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி பதில் கிடைத்திடாததற்கு தீர்வும் விண்ணப்பிக்கப்பட்ட இடத்திற்கு மின்பகிர்மான விதிமுறையின் 27(12)ன் படியான அரசு அவ்வவ்போது நெறிப்படுத்துவதற்கேற்ப தேவைப்படும் ஆவணங்களை தந்தால் மட்டுமே புறம்போக்கு நிலத்திற்கு மின்இணைப்பு தரவேண்டும் என குறிப்பிட்டுள்ளபடி விண்ணபித்திட்ட அன்றைய நாள்வரை அரசு எவ்வித மாற்றமும் செய்யாத காரணத்தினால் அவ்விதியில் குறிப்பிட்டுள்ளபடியான ஆவணம் இணைத்து திருமதி.தனலட்சுமி க.பெ மோகன் அவர்கள் பெயரில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பிக்கப்பட்ட மனுவிற்கு மின்இணைப்பு வழங்கிட மறுத்திட்டத்திற்கான காரணமும், அதற்கான தீர்வும் கிடைத்திட தாங்கள் உதவிபுரியவேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறார்.

**4. எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:**

4.1 Originally, one Mrs. Dhanalakshmi, Wife of Mr. Mohan, a resident of No.3, Vallalar Street, Varadhapuram Fourth Street, Nethaji Nagar, Sriram Nagar Extension, Old Perungalathur, Chennai has submitted an application for provision of electricity service connection. Along with the application, the said Dhanalakshmi has enclosed an indemnity bond dated Nil executed in a stamp paper dated 22.09.2014 having denomination of Rs.80/-. On receipt of such application, by a proceedings dated 30.09.2014 of the Assistant Engineer, TNEB, Mudichur, Chennai - 600 048, the applicant Dhanalakshmi was directed to provide copies of the document of title, if any or receipt for having paid the property tax or a certificate of proof of residence from the concerned Tahsildar. There is nothing arbitrary on the part of the Assistant Engineer to demand anyone of the documents apart from the indemnity bond to provide electricity service connection to Mrs. Dhanalakshmi because the land is situated in a government poromboke land. Such demand for production is based on the Circular, Board Proceedings and various instructions issued by the Department from time to time.

4.2 After receipt of the communication dated 30.09.2014 from the Assistant Engineer, TNEB, Mudichur, Chennai - 600 048, there was no response from the said applicant Mrs. Dhanalakshmi.

4.3 The petitioner herein namely Elumalai, who claims to be a relative of Dhanalakshmi, has submitted an application dated 04.07.2015 invoking Right to Information Act seeking certain information. In reply, by a proceedings dated 06.08.2015 of the Assistant Engineer, TNEB, Mudichur, it was stated that if the land or building is situated in a Government land, proof of residence and other documents are necessary. It was also stated that the applicant Dhanalakshmi has not come up with the documents sought for.

4.4 Further, such a requirement to produce document is in accordance with Tamilnadu Electricity Distribution Code Regulation 27/12 and 27/12 (4) of the Regulatory Commission which says "Supply shall be given in Poromboke lands/Government lands on production of No Objection Certificate from the concerned officer of the Government of Tamilnadu. The applicant shall execute an indemnity bond in FORM-6 of the ANNEXURE III to this code and also pay security deposit twice the

normal rate.

4.5 The petitioner has filed Petition No. 33 of 2016 before the Consumer Grievance Redressal Forum, Chennai Electricity Distribution Circle/South/TNEB alleging that there was no action forthcoming in response to his representations dated 04.07.2015, 27.08.2015 and 14.09.2015 addressed to this respondent. On perusal of the files produced by the Department and after hearing both sides, the Petition No. 33 of 2016 was rejected on 04.04.2016.

4.6 It is respectfully submitted that the petitioner has no *locus standi* to file this petition before this Honourable Forum. As mentioned above, the electricity service connection was originally sought for by one Mrs. Dhanalakshmi. Mrs. Dhanalakshmi has not come forward with any application or complied with the directions given by the Assistant Engineer, TNEB, Mudichur, Chennai - 600 048 to furnish three documents as a condition precedent for granting electricity service connection. Thereafter, the said Dhanalakshmi did not turn up. However, the petitioner has been batting for the said Dhanalakshmi claiming to be her relative. If really Mrs. Dhanalakshmi, to whom service connection is intended, has any grievance, she has to approach the Department.

4.7 Merely because he claims to be the relative of the above said Dhanalakshmi, he cannot maintain this petition before this Honourable Forum.

4.8 If electricity service connection has to be provided by following the Rules and regulations of the Board, the said Dhanalakshmi has to comply with the formalities relating to provision of electricity service connection because the service connection can be given in her name.

4.9 The petitioner is playing a shadow game and harassing the officials of the Department by sending repeated representations on behalf of Mrs. Dhanalakshmi. As per the TNERC Rules, the request of the petitioner. who is batting for Mrs. Dhanalakshmi, cannot be considered.

4.10 The petitioner is abusing the process of the various forum by repeatedly representing as though no action was taken by the Department on the basis of his representation. When he has no *locus standi* to send such representation, the Department is not bound by those representations sent by the petitioner. The petition has to be dismissed with costs for the Department inasmuch as the petitioner has no genuine grievance to be ventilated before this Forum.

**5. மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:**

**5.1** மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகிய இருவரும் தங்களுடைய வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின்குறை தீர்ப்பாளரின் முன்பாக **19.7.2016** அன்று கேட்புரை நடத்தப்பட்டது.

**5.2** மேல்முறையீட்டாளர் திரு ஏழுமலை கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

**5.3** எதிர்மனுதாரர் சார்பில் திரு நிலவழகன், சொற்பொறியாளர், தாம்பரம் அவர்கள் கலந்து கொண்டு எதிர்மனுதாரரது தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

**6. மேல்முறையீட்டாளர், கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:**

**6.1** மேல்முறையீட்டாளர் திரு ஏழுமலை அவர்கள், தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

**6.2** மேல்முறையீட்டாளர் அவரால் மேற்பார்வை பொறியாளர் சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு அவர்களுக்கு சமர்பிக்கப்பட்ட **17.1.2015**, **4.7.2015**, **25.8.2015** மற்றும் **14.9.2015** நாளிட்ட கடிதங்களுக்கு, பதில் கிடைக்கவில்லை என்பதால் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி ஈட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

6.3 மேலும், திருமதி தனலட்சுமி க/பெ.மோகன் அவர்களுக்கு விண்ணப்பம் சமர்பித்த நாளில் உள்ள விதிகளின் படி, ஆவணங்கள் சரியாக இருந்தால் அவருக்கு மின் இணைப்பு வழங்க உத்தரவு இட வேண்டும் என்றும் வாதிட்டார்.

## 7. <u>எதிர்மனுதாரர், கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்:</u>

7.1 திரு. நிலவழகன், செயற்பொறியாளர், தாம்பரம் அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளரின் கோரிக்கை அவரின் மின்இணைப்பு பற்றியது அல்ல திருமதி தனலட்சுமி என்பவரது மின்இணைப்பு கோரும் விண்ணப்பத்தை பற்றியது. எனவே, அவர் மேற்கண்ட கோரிக்கைகளுக்காக வாதிட அவருக்கு சட்டபூர்வமான உரிமை (Locus standi) கிடையாது என்றும் வாதிட்டார்.

7.3 அவர் தன்னுடைய மின்இணைப்பு பற்றிய கோரிக்கைக்காக முறையீடு செய்யவில்லை என்பதால் அவரின் மனு முறையீடு என்று ஆகாது. எனவே, அவர் கோரும் ஈட்டுத்தொகை தரவேண்டியது இல்லை என்று வாதுரை புரிந்தார்.

7.4 மேலும் மின்சாரம் வேண்டும் என்று விண்ணப்பம் சமர்பிக்கப்பட்டால் ஒழுங்குமுறை ஆணையம் வகுத்துள்ள மின்சாரப் பகிர்மான விதிகளுக்கு இணங்க அந்த விண்ணப்பம் உள்ளதா என்று பரீசிலித்து அவ்வாறு சரியாக இருந்தால் மின் இணைப்பு வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## 8. <u>மின்குறைதீர்ப்பாரின் தீர்வு:</u>

8.1 இந்த மேல்முறையீட்டாளர் மேற்பார்வை பொறியாளர் கே.கே.நகர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட 17.1.2015, 4.7.2015, 25.8.2015 மற்றும் 14.9.2015 நாளிட்ட மனுக்களுக்கு பதில் எதுவும் பெறப்படாததால், தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை

விதிகளின்படி பதில் கிடைத்திடாததற்கு ஈட்டுத்தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் திருமதி தனலட்சுமி க/பெ. மோகன் அவர்களின் பெயரில் சமர்பிக்கப்பட்ட விண்ணப்ப மனுவிற்கு மின் இணைப்பு வழங்க மறுத்திட்டதற்கான காரணமும், அதற்கான தீர்வும் வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளார்.

**8.2** எதிர்மனுதாரர், மேல்முறையீட்டாளரின் கோரிக்கை அவரின் மின் இணைப்பு பற்றியது அல்ல. எனவே, அவரின் மனுக்களுக்கு பதில் தரப்படவில்லை என்று ஈட்டுத்தொகை கோருவதற்கு எந்த சட்டபூர்வமான உரிமையும் (Locus standi) இல்லை என்று வாதிட்டுள்ளார்.

**8.3** மேலும், திருமதி தனலட்சுமி அவர்களுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் எனில் அவர்தான் முறையீடு சமர்பிக்க வேண்டும். திருமதி தனலட்சுமி அவர்கள் உதவி பொறியாளர், முடிச்சூர் அவர்கள் கோரிய ஆவணங்களை சமர்பிக்கவில்லை என்றும் அதன் பிறகு எந்த முறையீடும் சமர்ப்பிக்கவில்லை என்றும் வாதிட்டுள்ளார். மேலும் திருமதி தனலட்சுமி அவர்கள் ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்துள்ள தகுந்த ஆவணங்களுடன் மின்சார இணைப்பு கோரி உரிய விண்ணப்பத்தில் விண்ணப்பம் செய்தால் ஆராய்ந்து விதிப்படி இருந்தால் அவர் மின் இணைப்பை பெறலாம் என்றும் வாதிட்டுள்ளார்.

**8.4** இங்கு மேல்முறையீட்டாளர், தன்னுடைய மனுக்களுக்கு மேற்பார்வை பொறியாளர் பதில் தரவில்லை என்பதால் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிட்டபடி பதில் வழங்கவில்லை என்பதால் உரிய ஈட்டுத்தொகை வழங்க வேண்டும் என்று கோரியுள்ளதால் தமிழ்நாடு மின்சார பகிர்மானச் செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதி 17 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"17. Responding to Consumer's Complaint :*
*If any consumer makes a complaint in writing to the Territorial Engineer of the concerned licensee then, the Territorial Engineer concerned shall reply to the consumer within ten days after receipt of the letter. In case the Territorial Engineer requires to visit the site or consult any other officer to give a comprehensive reply, the Territorial Engineer shall explain to the consumer as to why a substantive response cannot be sent immediately and intimate the name address and telephone number of the*

*Officer dealing with the complaint. The Territorial Engineer shall also ensure that a substantive response is sent to the consumer within twenty days of receiving the complaint letter."*

8.5 மேற்கண்ட விதியின்படி, ஒரு நுகர்வோரின் எழுத்து வடிவில் சமர்பிக்கப்பட்ட முறையீட்டிற்கு சம்பந்தபட்ட பகுதிப் பொறியாளர் அந்த கடிதத்தை பெற்ற 10 நாட்களுக்குள் பதிலளித்தல் வேண்டும். விரிவான பதில் அளிப்பதற்கு இடத்தை பார்வையிட வேண்டும் என்ற நிலை அல்லது பிற அலுவலரிடம் கலந்தாய்வு செய்ய வேண்டிய நிலையில் நுகர்வோருக்கு ஏன் உடனே பதில் அளிக்க முடியவில்லை என்பதை விளக்க வேண்டும். மேலும் அந்த முறையீட்டை கையாளும் அலுவலரின் பெயர், முகவரி, தொலைபேசி எண் ஆகியவற்றை தெரிவித்தல் வேண்டும். மேலும் முறையீட்டை பெற்ற இருபது நாட்களுக்குள் நுகர்வோருக்கு பதில் அனுப்பப்பட்டுவிட்டதா என்பதையும், பகுதிப் பொறியாளர் உறுதிபடுத்தி கொள்ள வேண்டும் என்று தெரிகிறது.

8.6 மேல்முறையீட்டாளர், மேற்கண்ட விதியின்படி தனக்கு பதில் தரப்படவில்லை என்று வாதிட்டுள்ளார். ஆனால் மேற்கண்ட விதியில் ஒரு நுகர்வோரின் எழுத்து வடிவிலான முறையீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பது கவனிக்கதக்கதாகும்.

8.7 நுகர்வோர் என்பதற்கு மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறை தீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் விதி 2(g)ல் கொடுக்கப்பட்டுள்ள பொருள் விளக்கம் (Definition) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"2 (g) "consumer" means any person who is supplied with electricity for his own use by a licensee or the Government or by any other person engaged in the business of supplying electricity to the public under this Act or any other law for the time being in force and includes any person whose premises are for the time being connected for the purpose of receiving electricity with the works of a licensee, the Government or such other person as the case may be."*

8.8 மேற்கண்ட விளக்கத்தின்படி மின் நுகர்வோர் என்பவர் உரிமம் பெற்றவரால் அல்லது அரசால் அல்லது இந்த சட்டம் அல்லது அந்த சமயத்தில் அமலில் உள்ள ஏதாகிலும் பிறச்சட்டம்

மூலம் மின்சாரத்தை பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய அமர்த்தப்பட்ட நபரால், சொந்த உபயோகத்திற்காக மின்சாரம் விநியோகிக்கப்பட்டவர். மேலும் எந்த நபரின் வளாகம் மின்சாரம் பெறுவதற்காக உரிமம் பெற்றவர் அல்லது அரசு அல்லது அனுமதிக்கப்பட்ட பிற நபரின் மின் அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதோ அவரும் மின்நுகர்வோர் ஆகும்.

8.9 இந்த மேல்முறையீட்டாளர், மேற்கண்ட நுகர்வோர் என்ற விளக்கத்தின்படி நுகர்வோர் இல்லை. மேலும், மேற்கண்ட மனுக்களில் வரும் முறையீடும் அவருக்கு மின்இணைப்பு வழங்குவது சம்பந்தப்பட்டது அல்ல. அவரின் உறவினரின் வீட்டிற்கு மின்இணைப்பு வழங்குவது சம்பந்தமானது ஆகும். எனவே, அவரின் முறையீடு நுகர்வோரின் முறையீடு என்று மின்சார பகிர்மான செயல்திறச் செந்தரங்களின் விதித்தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ள விதி 17 பொருந்தாது. எனவே, மேல்முறையீட்டாளர் மின்சாரப் பகிர்மானச் செயல்திற செந்தரங்களின் விதித் தொகுப்பின் படி ஈட்டுத்தொகை கோரமுடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

8.10 மேலும் மேல்முறையீட்டாளரின் அடுத்த கோரிக்கை, அவரின் உறவினரான திருமதி தனலட்சுமி அவர்களுக்கு மின் இணைப்பு வழங்குவது சம்பந்தமானது. இது சம்பந்தமாக நான் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 2(e)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“(e) “complainant” means—*

*(i) a consumer of electricity supplied by the Licensee including applicants for new connections;*

*(ii) any voluntary consumer association registered under the Companies Act, 1956 (1 of 1956) or under any other law for the time being in force;*

*(iii) the Central Government or any State Government - who or which makes the complaint; (iv) one or more consumers, where there are numerous consumers having the same interest;*

*(v) in case of death of a consumer, his legal heirs or representatives.”*

**8.11** மேற்கண்ட விதியின்படி, ஒரு முறையீட்டாளர் என்பவர் ஒரு நுகர்வோர் ஆக இருக்க வேண்டும். மேலும் ஒரு புதிய மின் இணைப்பை பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவராகவும் இருக்கலாம். இந்த மேல்முறையீட்டாளர், நுகர்வோர் அல்ல, மேலும் ஒரு புதிய மின் இணைப்பை கோரியுள்ள விண்ணப்பதாரரும் அல்ல எனவே அவர் மேற்கண்ட விதி 2(e)ன் படி ஒரு முறையீட்டாளர் என்று எடுத்துக் கொள்ள முடியாது.

**8.12** மேலும், மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டாளரின் இரண்டாவது கோரிக்கை திருமதி தனலட்சுமி அவர்களுக்கு மின் இணைப்பு வழங்குவது சம்பந்தமானது. எனவே, அது மேல்முறையீட்டாளரின் கோரிக்கை அல்ல.

**8.13** மேலும், செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மின்குறைதீர்ப்பாளருக்கு முகவரியிடப்பட்ட 17.10.2016 நாளிட்ட (clarification) விளக்கத்தின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"xx xx xx*
*1) From the definition of 'consumer', 'complainant' and 'complaint' in CGRF Regulation and its Annexure –I the complaint format, it is implied that the grievances relating to supply of electricity for his own use shall only be redressed. . .*
*xxx xxx xx xxx"*

**8.14** மேற்குறிப்பிட்டுள்ள விளக்கத்தின்படி நுகர்வோர் முறையீட்டாளர் மற்றும் முறையீடு என்பதற்கு மன்றத்தின் விதிகளில் கொடுக்கப்பட்டுள்ள சொற்பொருள் விளக்கம் மற்றும் முறையீட்டு படிவம் ஆகியவைகளின் படி ஒருவரின் சொந்த உபயோகத்திற்கு பெற்றுள்ள மின்சாரம் சம்பந்தமான குறைகளை மட்டும் தான் மன்றமும், மின்குறைதீர்ப்பாளரும் தீர்வு செய்ய முடியும்.

**8.13** எனவே, மேற்கண்ட நிலையில், எதிர்மனுதாரரின் வாதமான மேல்முறையீட்டாளருக்கு மேற்கண்ட கோரிக்கைகளை மன்றத்தின் முன் சமர்ப்பிப்பதற்கு எந்த சட்டப்பூர்வமான உரிமையும் (locus standi) இல்லை என்ற வாதம் எனக்கு ஏற்புடையதாக உள்ளது. எனவே இந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**9. <u>முடிவுரை:</u>**

**9.1** மேற்கண்ட பத்தி 8ல் உள்ள தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

9.2 மேற்கண்ட தீர்வுடன், இந்த மேல்முறையீட்டு மனு எண்.33/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

(ஆ. தர்மராஜ்)
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. அர. ஏழுமலை,
த/பெ அ.ரங்கசாமி,
கன்னியம்மன் கோவில் தெரு,
மேட்டுக்காடு,
சட்டமங்கலம் கிராமம்,
மறைமலை நகர், காஞ்சிபுரம் மாவட்டம்.

2) மேற்பார்வை பொறியாளர்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு– II,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை– 600 078.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு II,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின் நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை– 600 078.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.

4.1 எண்.3, வள்ளலார் தெரு, வரதபுரம் 4வது தெரு, நேதாஜி நகர், ஸ்ரீராம் காலனியில் வசிக்கும் திருமதி தனலட்சுமி க/பெ. மோகன், என்பவர் மின் இணைப்பு கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். அந்த விண்ணப்பத்துடன் நாளிடப்படாத ரூ.80/– மதிப்புள்ள 22.9.2014 நாளிட்ட முத்திரைதாளில் காப்புறுதி பத்திரமும் சமர்பித்திருந்தார். உதவி பொறியாளர் முடிச்சூர் அவர்கள் தன்னுடைய 30.9.2014 நாளிட்ட கடிதத்தில் திருமதி தனலட்சுமி அவர்களை மேற்கண்ட இடம் புறம்போக்கு என்பதால் அந்த சொத்தின் உரிமையாளர் என்பதற்கு ஆதாரம் ஏதேனும் இருந்தால் அந்த ஆவணம் அல்லது சொத்துவரி ரசீது அல்லது தாசில்தாரரிடமிருந்து அவர் அந்த இடத்தில் குடியிருப்பவர் என்தற்கான சான்று பெற்று சமர்பிக்கும்படி கோரப்பட்டது. அவ்வாறு ஆவணங்கள் கேட்பது, வாரியத்தின் சுற்றறிக்கை மற்றும் அவ்வப்போது இடப்படும் ஆணைகளின்படிதான் என்றும் தெரிவித்துள்ளார்.

4.2 மேற்கண்ட உதவி பொறியாளரின் கடிதம் பெற்றபின் திருமதி தனலட்சுமி அவர்களிடமிருந்த எந்த தகவலும் இல்லை.

4.3 இந்த மேல்முறையீட்டாளர், திரு ஏழுமலை அவர்கள் திருமதி தனலட்சுமி அவர்களின் உறவினர் என்று தெரிவித்து தகவலறியும் உரிமை சட்டத்தின் கீழ் சில தகவல்களை 4.7.2015 நாளிட்ட கடிதத்தில் கோரியிருந்தார். அந்த கடிதத்திற்கு உதவி பொறியாளர் முடிச்சூர் அவர்கள் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களில் உள்ள கட்டிடங்களுக்கு உறைவிட சான்று மற்றும் பிற ஆவணங்களும் தேவை என்று தெரிவிக்கப்பட்டது என்றும், திருமதி தனலட்சுமி அவர்களிடமிருந்து கோரப்பட்ட ஆவணங்கள் சமர்பிக்கப்படவில்லை என்பதும் தெரிவிக்கப்பட்டது.

4.4 மேலும், அவ்வாறு கோருவது, தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித் தொகுப்பின் விதி 27(12) மற்றும் 27(12)(4)ற்கு இணங்க உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் விதி 27(12)படி புறம்போக்கு நிலங்கள்/அரசு நிலங்களின் தமிழ்நாடு அரசின் உரிய அலுவலரிடமிருந்து பெற்ற மனுப்பின்மை சான்றிதழை அளித்தால் மின் இணைப்பு வழங்கப்படும் என்றும், விண்ணப்பதாரர், இவ்விதியின் பின் இணைப்பில் உள்ள படிவம்–6 இன் படியான காப்புறுதி பத்திரமும், இயல்பான காப்புறுதித் தொகையைப் போல் இரட்டிப்பு மடங்கு காப்புறுதித் தொகை செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

4.5 மேல்முறையீட்டாளர், சென்னை மின்பகிர்மான சட்டம்/தெற்கு வின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு அவரின் 4.7.2015, 27.8.2015 மற்றும் 14.9.2015 நாளிட்ட கடிதங்களுக்கு பதில் இல்லை என்று மனு செய்திருந்தார். மன்றம் இருதரப்பு வாதங்களையும் கேட்டு 4.4.2016ல் மனுவை தள்ளுபடி செய்துள்ளது.

4.6 இந்த மேல்முறையீட்டாளருக்கு இதுசம்பந்தமாக முறையீடு செய்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை (Locus standi) மின் இணைப்பு கோருவது திருமதி தனலட்சுமி அவர்கள் ஆகும். அவர் உதவி பொறியாளர்/முடிச்சூர் அவர்களால் ஒரு மின் இணைப்பை பெறுவதற்காக சமர்பிக்க கோரிய ஆவணங்களை சமர்பிக்கவில்லை. அதன் கிறகு திருமதி தனலட்சுமி அவர்கள், மின் இணைப்பு கேட்டுவரவில்லை. திருமதி. தனலட்சுமியின் முறையீட்டிற்கு திருமதி தனலட்சுமிதான் உரிமம்தாரரை அனுக வேண்டும். திரு. ஏழுமலை அவர்கள் அவரின் உறவினர் என்று தெரிவித்து, தனலட்சுமி அவர்களின் மின் இணைப்பு சம்பந்தமாக முறையீடு செய்கிறார். அந்த மனு மன்றத்தின் முன்பு நிலைக்கதக்கது அல்ல.

மின்இணைப்பு, வாரியத்தின் விதிகளுக்கும் ஆணைகளுக்கும் இணங்க வழங்கப்படும். திருமதி தனலட்சுமி அவர்கள் தன்னுடைய பெயரின் மின் இணைப்பு பெற வேண்டுமெனில் அந்த விண்ணப்பம் விதிகளின் படி இருக்க வேண்டும்.

மேல்முறையீட்டாளருக்கு எந்த முகாந்திரமும் இல்லாதபொழுது, அவரின் மனுவிற்கு உரிமம்தாரர் பதில் கூற வேண்டியது இல்லை. எனவே, மேற்கண்ட முறையீட்டை, தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளார்.